<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.</u>

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 118/2016 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | செல்லக்கிளி | நாள் | 26.07.2022 |
| தகப்பனார் பெயர் | காத்தமுத்து | | |

<u>2 மற்றும் 3 ம் பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1 குறுக்கு விசாரணை :–</u>

1) என்னை திப்பம்பட்டி கோனூர் கிராமத்தில் திருமணம் செய்து வைத்துள்ளார் என்றால், சரிதான். எனக்கு 3 குழந்தைகள். என் 2 குழந்தைகளுக்கு திருமணமாகி குழந்தைகள் உள்ளனர். என் 3வது மகனுக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை. என் தந்தை கிருஷ்ணன் உயிருடன் இருக்கும்போதே எனக்கு திருமணம் ஆகிவிட்டது.

2) இவ்வழக்கு தாவா சொத்திலுள்ள பாகத்தை 2ஆக பிரித்து கொடுக்க வேண்டும் என்று பரிகாரம்கோரி நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். இந்த தாவா சொத்து 1 ஏக்கர் 64 செண்டுகள் ஆகும். அதன் பட்டா எண், சர்வே எண் எனக்கு சரியாக நினைவில்லை.

3) இந்த தாவா சொத்து 4 சர்வே எண்களில் உள்ளது. எனக்கு எந்தெந்த சர்வே எண்களில் எவ்வளவு அளவுகள் உள்ளது என்று சரியாக தெரியாது. தாவா சொத்திற்கான செக்குபந்தி விவரங்கள் எனக்கு சரியாக தெரியாது. பிரதிவாதிகள் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள பதிலுரையில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் குறித்து எனக்கு தெரியாது.

4) என் தாத்தா பெயர் சின்னகுழந்தை. என் தாத்தாவின் தந்தை பெயர் முத்துக்கவுண்டர். மேற்படி முத்துக்கவுண்டருக்கு என் தாத்தா சின்னகுழந்தை மட்டும்தான் வாரிசு. வேறு எவரும் இல்லை. நாரணி கவுண்டர், அய்யண்ண கவுண்டர், பாட்ட கவுண்டர் என்பவர்கள் யார் என்றால், அவர்கள் யார் என்று எனக்கு தெரியாது. அப்படி ஒரு நபர்களே இல்லை.

(2 மற்றும் 3 ம் பிரதிவாதிகள் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க வா.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.